[எழுத்தாளர் மனுஷ்யபுத்திரனின் உடல்ரீதியான கூறபாட்டை மிகவும் கீழ்த்தரமான மூறயில் விமர்சித்திருந்த தமிழ்நாடு தௌஹீத் ஜமாஅத் என்ற இஸ்லாமிய அமபை்பும் அதன் தலவைரான ஜயெ்னுலாபிதீனின் அந்த அறிக்கயினை இணயைத்தில் வாசிததோம். மதமொன்றினபை் பிரதிநிதிப்படுத்துபவர் மற்றவர்களுக்கு முன்மாதிரி இருக்க வணே்டும். அவ்விதமாக இருக்க வணே்டிய ஓருவரிடமிருந்து இவ்விதமாக ஓருவரின் உடல்ரீதியிலான கூறபாட்டினசை் சுட்டிக்காட்டி, வன்மூறயினதை் தணி்டும் வகயைிலான அறிக்கை வளெிவந்திருப்பது துரதிருஷ்டமானது. மனிதரின் பசே்சுரிமை பானே்ற அடிப்படை உரிமகைளுக்கு மதிப்பளிக்கும் சட்டங்களகை் கொண்ட மண்ணில் வாழ்ந்துகொண்டு, ஓருவரின் கருத்து தனக்குப் பிடிக்கவில்லயைனெ்பதற்காக இவ்விதம் கீழத்தரமாக அறிக்கை வளெியிட்பிரப்பது உண்மயைிலயேே கண்டிக்கத்தக்கது. தர்க்கத்தை தர்க்கரீதியில் எதிர்கொள்வதே சரியான அணுகுமூறை. இது பற்றிய எழுத்தாளர் ஜயெமோகனின் கட்டுரை, எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணனின் கட்டுரை மற்றும் தமிழ்நாடு மூற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்க அறிக்கை ஆகியன ஓரு பதிவுக்காக இங்கு மீள்பிரசுரமாகின்றன. - பதிவுகள் -

□□□□□□□□□□□□□□□□□ □□□□□□ □□□□□□□□□□□□□□□!

- □□□□□□□□□ -

இலங்கயைசை்சரே்ந்த சிறுமி ரிஷானா நஃீபீக் சவுதி அரபேியாவில் மூறயைான விசாரணை இல்லாமல் கொடுரமான மூறயைில் கொல்லப்பட்டமகை்கு எதிராக மனுஷ்யபுத்திரன் நக்கீரனில் எதிர்வினயைாற்றியிருந்தை இப்பாேதுதான் வாசித்தனே். ரிஷானா சவுதி அரபேியாவில் பொதுமக்கள் முன்னிலயைில் கழுத்துவடெ்டிக் கொலை சயெ்யப்பட்டார். ரிஷானா சயெ்த கூற்றம் ஓரு கூழந்தயைின் மரணத்துக்குக் காரணமாக அமநை்தது. அக்கூற்றத்துக்கு ஆதாரமாகச் சொல்லப்பட்டது அவரே அளித்ததாக முன்வகை்கப்பட்ட ஓரு வாக்குமுலம். அந்த வாக்குமுலம் அவருக்குத் தரியாத

மொழியில் இருந்தது, அவர் அதில் கையெழுத்திடச் சொல்லப்பட்டிருக்கிறார். தன்னந்தனியாக சவுதியரபேயா சென்ற ,படிப்பறிவில்லாத மூதிரா இளம்பெண்ணான ரிஷானா, அவளுடைய தரப்பை எடுத்துரைக்க எந்த வாய்ப்பும் அளிக்கப்படாமல் விசாரணைசெய்யப்பட்டுக் கடசியில் கொலைசெய்யப்பட்டிருக்கிறார்.

உலகமெங்கும் கூற்றநடமைறுறை சட்டத்தில் கூற்றம்சாட்டப்பட்டவர் காவலில் இருக்கையில் அளித்த வாக்குமூலம் ஆதாரமாகக் கருதப்படுவதில்லை. சவுதி அரசின் ஷரியா சட்டம் அதைக் கருத்தில் கொள்ளவில்லை. எந்தக் கூற்றத்திற்கும் நோக்கம் [மோட்டிவ்] ஓரு முக்கியமான ஆதாரம். ரிஷானா விஷயத்தில் அதுவும் கருத்தில் கொள்ளப்படவில்லை. மரணதண்டனை அமுலில் உள்ள நாடுகளில் கூடத் திட்டமிட்ட தொழில்முறைக் கொலைக்கு மட்டுமே மரணதண்டனை வழங்கப்படுகிறது. அதாவது அரிதினும் அரிது என்று வகைப்படுத்தப்பட்ட கூற்றங்களுக்கு. அதுவும் தெளிவான பூறவய ஆதாரங்களின் அடிப்படையில் மட்டுமே அது அளிக்கப்படும்.

மரணதண்டனை மிகச் சாதாரணமாக அளிக்கப்படும் நாடுகளில்கூட அது இளம்கூற்றவாளிகளுக்கோ பாலுடன்டும் அன்னையருக்கோ அளிக்கப்படுவதில்லை. இங்கு அந்த கருணை எதுவும் காட்டப்படவில்லை. உலகமே மனிதாபிமான நோக்கில் மன்றாடியும்கூட சவுதி இணங்கவில்லை. இஸ்லாமிய ஷரியா சட்டத்துக்கு ஒப்பவே தான் சயெல்படுவதாகச் சொல்லிவிட்டது

மனுஷ்யபுத்திரன் மிக நிதானமாகவும் கவனமாகவும்தான் எதிர்வினையாற்றியிருக்கிறார். அவர் இஸ்லாமுக்கோ ஷரியாவுக்கோ எதிராக எதுவும் சொல்லவில்லை. ஷரியா சட்டம் இப்படி இயந்திரத்தனமாகக் கையாளப்படக்கூடாது என்று அவர் சொல்கிறார்.சட்டங்களை சமகால மனிதாபிமானநோக்கு வழிநடத்தவேண்டும் என்று சொல்கிறார். அதற்குத் தமிழ்நாடு தௌஹீத் ஜமாஅத் என்ற இஸ்லாமிய அமைப்பும் அதன் தலைவரான ஜெய்னுலாபிதீன் அளித்திருக்கும் கீழ்த்தர எதிர்வினை மிகமிக வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

இஸ்லாமின் எதிரிகள் அல்ல, இஸ்லாமைப் பிரதிநிதித்துவம் செய்பவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் சவுதி அரபேயா போன்ற அரசுகளும் , எந்தவிதமான மனிதாபிமானமும் இல்லாமல் அவர்களை ஆதரிக்கும் இந்த மதவறிக்குழுவினரும்தான் இஸ்லாமகை் கவேலப்படுத்துகிறர்கள் என்பதை இஸ்லாமியர் பூரிந்துகொள்ளவேண்டும். இந்தத் தருணத்தில் மனுஷ்யபுத்திரன் எடுத்திருக்கும் நிலைபாட்டுக்காக, அவரது தன்னம்பிக்கைக்காக அவரைப் பாராட்டுகிறனே். இந்த எதிர்ப்புகளையும் வசகைளையும் தாண்டிச் சலெல்லும் வல்லமையை அவரது கவிமனம் அவருக்கு அளிக்கட்டும்.

இத்தரணத்தில் தமிழில் கருத்துரிமைக்காகக் குரல்கொடுக்கக்கூடியவர்கள் அனைவரும் கருத்துவேறுபாடுமகைளதை தாண்டி மனுஷ்யபுத்திரனுடன் இணைந்திருக்கவேண்டும் என்று கோருகிறேன். இந்தவகை மிரட்டல்கள் வசைகள் மலெல்ல மலெல்ல ஒரு கருத்துச்சூழலையே அழித்துவிடும் தன்மை கொண்டவை.

மனுஷ்யபுத்திரன் கட்டுரை: http://www.envazhi.com/saudis-cruelty-against-young-rizana-nafeek/

http://www.jeyamohan.in/?p=34193

□□□□□□□□□□□ □□□□□□□□□□□□□□□□□ □□□□□□ □□□□□□ □□□□□□□□□□□□□□□□□□ □□□□□□□□!

- □□□.□□□□□□□□ -

சவூதி அரபேிய நாட்டில் வீட்டு வலேை சயெ்தவந்த 17 வயது சிறுமிக்கு மரணதண்டனை வழங்கப்பட்டதை விமர்சித்த தமிழக எழுத்தாளர் மனுஷ்யபுத்திரனுக்கு எதிராக மதவாதிகள் தாக்குதல் தொடுப்பதற்கு தமிழ்நாடு மூற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் கண்டனம் தரிெவித்துள்ளது. அவருடன் தனது ஓருமபை்பாட்டதை் தரிெவித்து சங்கத்தின் தலவைர் ச. தமிழ்ச்சலெ்வன், சயெலாளர் சு. வங்கடசேன் இருவரும் திங்களன்று (ஜன.28) வளெியிட்ட அறிக்கை வருமாறு:

எழுத்தாளரும் அரசியல் - சமூக விமர்சகரும்மான மனுஷ்யபுத்திரன் மீது மிரட்டல் தாக்குதல் தொடுக்கப்படுவதை தமிழ்நாடு மூற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள்

சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. அவருடனும் கருத்துச் சுதந்திரத்திற்காக நிற்போருடனும் தமுஎகச தனது ஓருமைப்பாட்டதை் தெரிவித்துக்கொள்கிறது.

இலங்கையைச் சேர்ந்த 17 வயதுச் சிறுமி ரிசானா நஃபீக் தன் கூடும்ப வறுமை காரணமாக சவுதி அரேபியா நாட்டில் வீட்டு வேலை செய்துவந்தவர். ஓரு கூழந்தையைக் கொன்றதாகக் கூற்றம் சாட்டப்பட்ட அந்தச் சிறுமி அரசின் மரணதண்டனைக்கு உள்ளானார். நீதிமன்றம், மதவாதம் சார்ந்த சட்டத்தின் அடிப்படையில் அவருக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. கொடுமையான மூறையில், பொது இடத்தில் அந்தத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

பல இஸ்லாமிய நாடுகள் உள்பட உலகின் பல்வேறு நாடுகளிலும் மரண தண்டனை ஒழிக்கப்பட்டு வரும் இக்காலத்தில், ஓரு சிறுமியை இவ்வாறு கொன்றது ஏற்கத்தக்கது அல்ல என்ற கருத்தை, 'நக்கீரன்' வார இதழில் மனுஷ்யபுத்திரன் தாம் எழுதிய ஓரு கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார். மரண தண்டனை குறித்து பலருக்கும் மாறுபட்ட கருத்துகள் உள்ளன என்ற பேதிலும், மனுஷ்யபுத்திரனுக்குத் தனது கருத்தை வெளிப்படுத்தும் சுதந்திரமும் உரிமையும் இருக்கிறது. அந்த உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டியதாகும்.

ஆனால், தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாத் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம் மக்களின் ஏகப்பிரதிநிதியாகத் தம்மதை் தாமே நியமித்துக்கொண்டு, அவர்களது மார்க்கத்திற்கு எதிரான கருத்தை மனுஷ்யபுத்திரன் கூறிவிட்டார் என்று கூறி அவரையும் அதை வெளியிட்ட பத்திரிகையின் ஆசிரியர் கோபால் அவர்களையும் கண்டித்து கூட்டம் நடத்தியுள்ளது. எழுத்தாளரின் வாதத்தை ஆதரித்துக் கருத்துத் தெரிவித்த திமுக தலைவர் கருணாநிதிக்கும் கண்டனம் தெரிவித்துள்ளது. அததை் தொடர்ந்து சமூகவலைத்தளங்களில் மனுஷ்யபுத்திரனதை் தாக்குகிற கருத்துகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. ஓருவர் கொலைமிரட்டலே கூட விடுத்துள்ளார்.

மதத்தின் பெயரால் இப்படிப்பட்ட சகிப்பின்மைகள் வளர்வது மக்கள் ஒற்றுமைக்கும், ஜனநாயகத்திற்கும் பெரும் அச்சுறுத்தலாகும். மலேும் இது, முஸ்லிம் மக்கள் அனைவரையுமே தவறான மூறையில் சித்தரிக்க முயலும் சக்திகளுக்கே சாதகமானதுமாகும்.

பொதுவான முஸ்லிம் மக்கள் இயக்கங்கள் இப்படிப்பட்ட செயலில் இறங்கவில்லை என்பதையும் இங்கே சுட்டிக்காட்டியாக வேண்டும். அந்த இயக்கங்கள் இத்தகைய பொறுமையற்ற மிரட்டல்களை வெளிப்படையாகக் கண்டிக்க வேண்டும் என்று தமுஎகச

கடேட்டுக்கொள்கிறது. தமிழகத்தில் உள்ள கலை இலக்கிய அமைப்புகளும், எழுத்தாளர்கள் - கலைஞர்களும், ஜனநாயக - மதச்சார்பற்ற சக்திகளும் இப்பிரச்சனையில் மனுஷ்புத்திரனோடு தங்களது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் என்றும் தமுஎகச கடேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

http://www.eramurukan.in

□□□□□□□□□□□□□□□!

- □□□.□□□□□□□□□□□□□ -

எழுத்தாளரும் சமூக விமர்சகருமான நண்பர் மனுஷ்யபுத்திரன் அவர்களை மிகவும் தரக்குறைவான வார்த்தைகளால் விமர்சனம் செய்ததோடு ,அவரது எழுத்துச் செயல்பாடுகளை மூடக்கூவதற்காக கொலை மிரட்டல் விடுக்கும் மதவாதத் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

சவூதி அரபேிய நாட்டில் வீ ட்டு வலேை செய்துவந்த சிறுமிக்கு மரணதண்டனை வழங்கப்பட்டதை விமர்சித்து நண்பர் மனுஷ்யபுத்திரன் எழுதிய கட்டுரையைத்

தொடர்ந்து அவர் மீ து தொடர்ந்த மிரட்டல்களை மதவாத அமைப்புகள் விடுத்துவருகின்றன, இது போன்ற கீ ழ்தரமான அவதூறுகள், அச்சுறுத்தல்கள் உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

பொறுப்பற்ற இந்தத் தாக்குதலால் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாகி உள்ள மனுஷ்யபுத்திரன் அவர்களுக்கு மனஉறுதி தரும்படியாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து கருத்துரிமையைப் பாதுகாக்க துணைநிற்க வேண்டும்,

மனுஷ்யபுத்திரன் மீ து நடைபெற்ற இந்தக் கொடூர த் தாக்குதல் எழுத்தாளரின் அடிப்படைச் சுதந்திரத்தை பறிக்கும் வன்முறையாகும், இத் தாக்குதலை கண்டித்து அனைவரும் தங்களின் உரத்த கண்டனங்களை பதிவு சயெ்ய வேண்டுமென கேட்டுக் கொள்கிறனே்

http://www.sramakrishnan.com/?p=3239